**Starting time 11.15 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.296/2009**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 07.08.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>**1**-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால், செந்தாரப்பட்டியில் அமைந்துள்ள அதன் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது. எவ்வளவு விஸ்தீரண நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால், தெரியாது. தாவா சொத்து 2-ம் பிரதிவாதி பெயரில் 29.06.1998 தேதியன்று கிரயம் வாங்கப்பட்டது என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரயம் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்குவதற்கு 4, 5 மாதங்களுக்கு முன்பாகவே என்னுடைய கணவர் இறந்துவிட்டார் என்றால், ஆமாம். என்னுடைய கணவருக்கு நானும், 2-ம் பிரதிவாதியும், பாண்டு, கலா என்ற 2 மகன் மற்றும் ஒரு மகளும் வாரிசுகள் என்றால், ஆமாம். எனது கணவரின் வாரிசு சான்றிதழை வா.சா.ஆ.8 ஆக தாகக்ல செய்துள்ளேன் என்றால், ஆமாம். பாண்டுவையும், கலாவையும் நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், ஆமாம். தாவா சொத்தில் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் எனக்கு உரிமையானது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், என்னுடைய சொத்து என்று சொல்லிதான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு எவ்வாறு உரிமையானது, அந்த உரிமை

சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் குறித்தும் சொல்லாமல்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தில் என்னுடைய பாகத்தை பிரித்துக் கொடுக்க சொல்லியும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, அவ்வாறுதான் கேட்டுள்ளேன்.

2. துரைசாமி இந்த வழக்கு சொத்தை 29.06.1998 தேதியன்று வெங்கடாசல கவுண்டர் குமாரர் நல்லமுத்து மற்றும் அவரது இளவர் குமாரர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். துரைசாமி புல எண் 265/5c, 265/5D, 265/5B ஆகியவற்றில் மொத்தம் 1 ஏக்கர் 63 செண்ட் நிலம் கிணற்றுடன் கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். மேற்படி நிலத்தை 2-ம் பிரதிவாதி கொஞ்சம் கொஞ்சமாக நிறை பேருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். அவ்வாறு கிரயம் கொடுத்த சொத்துக்களையும் கிரயம் வாங்கியவர்களையும் நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால், ஆமாம். அவ்வாறு சேர்க்காமல் விட்டதற்கு எந்த காரணமும் இல்லை என்றால், ஆமாம்.

3. 2-ம் பிரதிவாதி பெயரிலுள்ள 1998 பத்திரத்தின் அடிப்படையில்தான் பல்வேறு நபர்களுக்கு அவர் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். அந்த கிரயப் பத்திரங்களில் தனக்கு 1998 பத்திரம் மூலம்தான் சொத்து பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுதான் கிரயம் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி தன்னுடைய 1998 கிரயப் பத்திரத்தின் அடிப்படையில்தான் 1-ம் பிரதிவாதிக்கும் கிரயம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், எனக்கு தெரியமலேயே எழுதிவிட்டார்கள். 1-ம் பிரதிவாதியின் கிரயப் பத்திரம் குறித்து நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால், வழக்கு போட்ட பிறகுதான் பார்த்தேன். 2-ம் பிரதிவாதி அவருடைய சொத்தை 1-ம் பிரதிவாதிக்கு கியரம் கொடுத்த பத்திரத்தில் நானும் கையொப்பம் போட வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. என்னுடைய பெயரிலோ, என்னுடைய மகன் மற்றும் மகளான பாண்டு மற்றும் கலா ஆகியோர்

பெயரிலோ வழக்கு சொத்திற்கான பட்டா இல்லை என்றால், ஆமாம். தாவா சொத்திற்கான அடங்கல் எனது பெயரில் இல்லை என்றால், ஆமாம். இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி என்ன பதில் போட்டுள்ளார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4. 06.03.2002 தேதியன்று சொத்திற்கான பணத்தை 1-ம் பிரதிவாதியிடமிருந்து 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டுதான் கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல, பணம் எதுவும் வாங்கவில்லை. இளங்கோவனுக்கு கிரயப் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்த பிறகுதான் 23.03.2006 தேதியன்று துரைசாமி ஒரு சந்திரா என்பவருக்கும் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால், செய்து கொடுத்திருப்பார். 09.112009-ல் Grace Charitable Truest என்ற டிரஸ்டுக்கு அவருடைய கிரய சொத்தின் ஒரு பகுதியை கிரயம் செய்து கொடுதுள்ளார் என்றால், ஆமாம். ஒரு நளலி என்பவருக்கும் 2-ம் பிரதிவாதி கிரயம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், இல்லை. 2010-ல் ஒரு கோவிந்தராஜ் என்பவருக்கும் 2012-ல் ஒரு மாணிக்கம் என்பவருக்கும் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். மேற்படி கிரயங்கள் செல்லாது என நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால், பணம் இல்லாததால் சொத்துக்களை விற்றுத்தான் நாங்கள் சாப்பிட்டோம் 2-ம் பிரதிவாதிதான் சொத்துக்களை விற்று பணம் பெற்றார் என்றாலும், நான் தற்போது சொத்தை விற்று நாங்கள் சாப்பிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. இந்த வழக்கிற்கான சங்கதிகளை 2-ம் பிரதிவாதி சொல்லிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை, நான் செலவு செய்துதான் போட்டேன். 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதிக் கொடுத்தது பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், அக்கம் பக்கத்தினர் சொல்லிதான் எனக்கு தெரியவந்தது ஆட்களை வைத்து அடித்து மிரட்டியதால் 2-ம் பிரதிவாதி கையெழுத்து போட்டுவிட்டதாக என்னிடம் கூறினார். மேற்படி சங்கதிகளை நான் என் வழக்கில் கூறியுள்ளேனா என்றால், தற்பொழுது கேட்பதால் சொல்கிறேன். நான் மேற்படி சங்கதிகளை நான் என்னுடைய வழக்கில் சொல்லவில்லை என்றாலும், ரவியிடம் வாங்கிய

கடனுக்காகத்தான் கிரய பத்திரம் ஏற்படுத்தியதாக நான் கூறியுள்ளேன் என்றால், சரியல்ல, ரவியும் 1-ம் பிரதிவாதியும் நண்பர்கள். மேற்படி சங்கதிகளை நான் என் வழக்கில் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

5. 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த கிரயம் செல்லும் என்றாலும், 2-ம் பிரதிவாதி வழக்கு போட்டால் நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்பதால் 2-ம் பிரதிவாதி என் பெயரில் வழக்கு போட்டுள்ளார் என்றால், சரியல்ல. கிரயம் செல்லாது என வழக்கு போடுமாறு 2-ம் பிரதிவாதி எனக்கு சொல்லிக் கொடுத்தன் பேரில் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால், சரியல்ல. என் கணவர் பெயரில் மணிவிழுந்தானில் இருந்த சொத்தை விற்று 2-ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கியதாக நான் கூறுவதே தவறு என்றால், சரியல்ல, அரிசி வியாபாரம் செய்துதான் சொத்து வாங்கினோம், அந்த சொ்தை விற்றுதான் அந்த சொத்து வாங்கப்பட்டது. வியாபாரம் செய்து வந்த பணத்தை கொண்டு சொத்து வாங்கியதாக நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், 1-ம் பிரதிவாதி பெயருக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பத்திரம் செல்லும் என்றாலும், சரியல்ல. நான் இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.51 A.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.